ARTICLE 43 | Research Article – Peer Reviewed | Article ID: TAJP-2026-00075
Vol. 20, No. 01 (October 2026) – Part II | pp. 101–107
Received: 3 October 2026 • Accepted: 3 October 2026

கி.ரா.வின் ‘கதவு’ சிறுகதை புலப்படுத்தும் பண்பாடு

திருமதி .சுப்பம்மாள் பி[1,*]
[1]தமிழ் ஆசிரியர், இந்தியன் பள்ளி அல் சீப், ஓமன்., oman
***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** திருமதி .சுப்பம்மாள் பி — tamilseminar12@gmail.com

ஆய்வுச் சுருக்கம்
தமிழ்ச் சிறுகதை இலக்கியத்தில் கரிசல் வட்டார மக்களின் வாழ்வியலை இயல்பான மொழிநடையிலும் நுண்ணிய சமூகப் பார்வையிலும் பதிவு செய்தவர் கி. ராஜநாராயணன் (கி.ரா.). அவருடைய ‘கதவு’ சிறுகதை, ஒரு பழைய வீட்டின் கதவை மையப்படுத்தி அமைகிறது. வறுமை, குடும்ப உறவு, குழந்தைகளின் விளையாட்டு, உழைப்பு, கிராமிய சமூக உறவுகள், வரிவசூல், பசி, இயற்கைச் சூழல், பொருளாதார நெருக்கடி, பொருள்களின் நினைவியல் மதிப்பு, உணவுப் பழக்கம், குழந்தைகளின் பொறுப்புணர்வு, கிராம நிர்வாக அமைப்பு, வரிவிதிப்பு, தாய்மை உணர்வு போன்ற பல்வேறு பண்பாட்டுக் கூறுகளைப் இக்கதை பதிவு செய்கிறது. இச்சிறுகதையில் ‘கதவு’ என்பது வெறும் வீட்டின் ஒரு பொருளாக அமையவில்லை. அது குழந்தைகளின் விளையாட்டுக் களமாகவும், குடும்பத்தின் அடையாளமாகவும், பாதுகாப்பின் குறியீடாகவும், இறுதியில் வறுமையின் கொடுமையை உணர்த்தும் பண்பாட்டுச் சின்னமாகவும் உருவெடுக்கிறது. கதவு சிறுகதையில் இடம்பெறும் நிகழ்வுகள் மற்றும் உரையாடல்களின் அடிப்படையில் அதன் பண்பாட்டுப் பதிவுகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

Keywords / திறவுச் சொற்கள்: கி.ரா – கதவு - கரிசல் பண்பாடு - நாட்டுப்புற வாழ்வியல்; குழந்தைகள் – பொறுப்புணர்வு – வறுமை – உழைப்பு - கிராமிய பண்பாடு – விளையாட்டு – கிராம நிர்வாக அமைப்பு – உணவுப் பழக்கம் – இயற்கைச் சூழல் – பொருளாதார வசதி – பாதுகாப்பின் குறியீடு - தாய்மை

How to cite / மேற்கோள் காட்டும் முறை: பி, தி. . (2026). கி.ரா.வின் ‘கதவு’ சிறுகதை புலப்படுத்தும் பண்பாடு. Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), Volume 2, –.

முன்னுரை

ஒரு சமூகத்தின் பண்பாட்டை அறிந்து கொள்வதற்கு அதன் இலக்கியப் படைப்புகள் முக்கியமான ஆவணங்களாக அமைகின்றன. குறிப்பாக நாட்டுப்புற மக்களின் அன்றாட வாழ்க்கை, பேச்சுமொழி, தொழில், உணவு, விளையாட்டு, நம்பிக்கை, உறவுமுறை, பொருளாதார நிலை போன்றவை இலக்கியப் படைப்புகளில் இயல்பாகப் பதிவாகின்றன. கி.ரா.வின் படைப்புலகம் கரிசல் நில மக்களின் வாழ்க்கையை மையமாகக் கொண்டது. அவருடைய ‘கதவு’ சிறுகதையும் அவ்வகையில் ஒரு கிராமிய குடும்பத்தின் வாழ்க்கைச் சூழலைச் சித்திரிக்கிறது. பழைய காலத்து காரை வீட்டில் பொருத்தப்பட்டிருந்த பெரிய கதவு, குழந்தைகளின் விளையாட்டுப் பொருளாக மாறுவதிலிருந்து, பின்னர் அந்தக் கதவு வீட்டிலிருந்து அகற்றப்படுவதால் ஏற்படும் பாதுகாப்பின்மை வரை கதை நகர்கிறது.

கதவு கதைக்கரு

வறுமையை தீர்க்க வடிக்கு கடன் வாங்கி, அதனை அடைக்க வெளியூர் வேலைக்கு சென்ற தந்தையிடம் எந்த தகவலுமில்லாமையால் 3 மாத கைக்குழந்தை மற்றும் ஒரு எட்டு வயது சிறுமி, அவளுக்கு இளையவன் என்று 3 பிள்ளைகளையும் வைத்துக் கொண்டு காட்டு வேலைக்குச் சென்று பசியாற்றுகிறாள் அவள் தாய். குழந்தைகள் அவ்வீட்டிக் கதவினை பேருந்தில் பயணம் செய்வதாக கற்பனை செய்து கொண்டு விளையாடுகின்றனர். ஊர் தலையாரிடமிருந்து வாங்கப்பட்ட கடனுக்காக கதவு தலையாரியால் தூக்கிச் செல்லப்படுகிறது. கதவற்ற சூழலில் வாடைக்காற்றினால் குழந்தை இறக்கிறது. உணவை நாய் உண்டு செல்கிறது. இதனை தாங்கிக்கொண்டு குழந்தைகளுக்காக தாய் உயிர் பிழைத்து வறுமையோடு போராடும் வாழ்வினை படம்பிடித்துக் காட்டுகிறது கதவு என்ற சிறுகதை தங்கள் வீட்டுக் கதவு சாவடியில் இருப்பதைக் கண்ட குழந்தைகள் அதனைப் பலமாக பற்றிக் கொள்வதாக கதை முடிகிறது.

கதவு – பண்பாட்டுச் சின்னமாக

சிறுகதையின் மையப் பொருளாக அமைவது ‘கதவு’. “அது பழைய காலத்துக் காரை வீடு. பெரிய ஒரே கதவாகப் போட்டிருந்தது.” இங்கு கதவு என்பது கட்டிடத்தின் ஒரு பகுதி மட்டுமல்ல. அந்தக் குடும்பத்தின் பழைய சமூக-பொருளாதார நிலைக்கும் அடையாளமாக அமைகிறது. ஒரு காலத்தில் வசதியுடன் வாழ்ந்த குடும்பம் பின்னர் வறுமைக்குள் தள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே கதவு, கடந்த கால வளத்தையும் நிகழ்கால வறுமையையும் இணைக்கும் நினைவுச் சின்னமாகக் காணப்படுகிறது. மேலும், கதவு குழந்தைகளின் விளையாட்டுத் தளமாக மாறுகிறது. குழந்தைகள் கதவில் ஏறி, அதைப் பின்னும் முன்னுமாக ஆட்டி மகிழ்கின்றனர். இதன் மூலம் கிராமிய குழந்தைகளின் விளையாட்டு உலகில் விலையுயர்ந்த விளையாட்டுப் பொருட்களுக்கு மாற்றாகச் சுற்றுப்புறப் பொருட்களே விளையாட்டுக் கருவிகளாக மாறியிருப்பது புலப்படுகிறது.

குழந்தைகளின் விளையாட்டுப் பண்பாடு

‘கதவு’ சிறுகதையின் முக்கியமான பண்பாட்டுப் பதிவு குழந்தைகளின் விளையாட்டு ஆகும். சீனிவாசன் கதவைப் பேருந்தாகக் கற்பனை செய்து குழந்தைகளுக்கு ‘டிக்கெட்’ வழங்குகிறான்: “எல்லோரும் டிக்கட்டு வாங்கிக்கிடுங்க” குழந்தைகள், “திருநெல்வேலிக்கு” என்று கூறி, பின்னர் “திருநெவேலிக்கு, திருநெவேலிக்கு” (கதவு பக்.9) என்று கூச்சலிடுகின்றனர். இங்கு கற்பனை விளையாட்டு, பயண அனுபவம், குழுவாகச் செயல்படுதல் ஆகியவை இணைகின்றன. கதவு ஒரு பேருந்தாகவும், குழந்தைகள் பயணிகளாகவும், சீனிவாசன் நடத்துநராகவும் கற்பனை செய்யப்படுகின்றனர். இதன் மூலம் கிராமியக் குழந்தைகளின் கற்பனை ஆற்றல், கூட்டாக விளையாடும் பண்பு, சுற்றுச்சூழலை விளையாட்டாக மாற்றிக் கொள்ளும் திறன் ஆகியவை வெளிப்படுகின்றன.

உடன்பிறப்புப் பாசமும் குடும்ப உறவும்

லட்சுமி–சீனிவாசன் உறவு சிறுகதையின் மற்றொரு முக்கியமான பண்பாட்டுக் கூறாகும். லட்சுமி கண்டெடுத்த தீப்பெட்டிப் படத்தை முதலில் தம்பியிடம் கொடுக்க மறுக்கிறாள். பின்னர் இருவரும் சேர்ந்து அதைக்

Vol. 20, No. 01 (October 2026) – Part II • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

கதவில் ஒட்டுகின்றனர். “இரண்டு பேருமாகச் சேர்ந்து கதவில் ஒட்டினார்கள். படத்தைப் பார்த்து சந்தோஷத்தினால் கைதட்டிக்கொண்டு குதித்தார்கள்.” (கதவு, பக்.11) இதில் உடன்பிறப்புகளுக்கிடையிலான பகிர்வு, விளையாட்டு, பொருளின் மீதான மகிழ்ச்சி ஆகியவை வெளிப்படுகின்றன. மேலும், தாயார் காட்டுக்குச் செல்லும் சூழலில் மூத்த குழந்தைகள் கைக்குழந்தையைப் பார்த்துக்கொள்கின்றனர்: “லட்சுமியும் சீனிவாசனும் கைக்குழந்தையை அம்மா காட்டிலிருந்து வரும்வரை வைத்துக்கொண்டு கதவோடு விளையாடிக் கொண்டிருப்பார்கள்.” (கதவு, பக்.10) இதன் வழியாக வறுமைச் சூழலில் குழந்தைகள் குடும்பப் பொறுப்பிலும் பங்கெடுக்கும் நிலை வெளிப்படுகிறது.

உழைப்புப் பண்பாடு

சிறுகதை வெளிப்படுத்தும் முக்கியமான சமூகப் பண்பாடு உழைப்பு ஆகும். கதையில் தாய் காட்டுக்கு வேலைக்குச் செல்கிறாள்; தந்தை மணிமுத்தாற்றில் கூலி வேலைக்குச் செல்கிறார். “அம்மா காட்டுக்கு வேலை செய்யப் போய்விடுவாள். அப்பா மணிமுத்தாறில் கூலிவேலை செய்யப் போய்விட்டார்.” (கதவு, பக்.10) இதன் மூலம் கிராமியக் குடும்பத்தின் வாழ்வாதாரம் கூலி உழைப்பைச் சார்ந்திருப்பது தெரியவருகிறது. பின்னர் தாய் காட்டிலிருந்து விறகுச் சுள்ளிகளைச் சுமந்து வருகிறாள்: “சாயந்திரம் வெகுநேரம் கழித்து அம்மா தலையில் விறகுச் சுள்ளிகளுடன் வந்தாள்.” இக்காட்சி பெண்களின் உழைப்பையும் குடும்பப் பராமரிப்பில் அவர்களுக்குள்ள முக்கியப் பங்கையும் காட்டுகிறது.

வறுமையும் கிராமியப் பொருளாதாரமும்

சிறுகதையின் அடிப்படைப் பின்னணியாக வறுமை அமைந்துள்ளது. “முன்பு வசதி உள்ளவர்களாக வாழ்ந்தவர்கள். இப்பொழுது ரொம்பவும் நொடித்துப் போய்விட்டார்கள்.”(கதவு, பக்.10) இக்கூற்று குடும்பத்தின் பொருளாதார வீழ்ச்சியை நேரடியாக வெளிப்படுத்துகிறது. மேலும், மழையின்மை விவசாயம் மற்றும் கிராமிய வாழ்வாதாரத்தைப் பாதித்திருப்பதை தாய் கூறுகிறாள்: “மூணு வருசமா மழை தண்ணி இல்லையே.” (கதவு, பக்.12) மழையின்மை, வேலைவாய்ப்புக் குறைவு, வறுமை, வரி செலுத்த இயலாமை என்ற சமூகப் பொருளாதாரத் தொடர்பு இச்சிறுகதையில் பதிவாகிறது.

உணவுப் பண்பாடு

கதையில் உணவுப் பண்பாடும் வறுமையோடு இணைந்து வெளிப்படுகிறது. குழந்தைகள் ‘கம்மஞ்சோறு’ கேட்கின்றனர். “டேய் உள்ளே போய்க் கொஞ்சம் கம்மஞ்சோறு கொண்டா, இந்தப் படத்தை நம்ம கதவிலே ஒட்டணும்.” (கதவு,பக்.11) பின்னர் வீட்டில் உணவுக்குக் கூட பற்றாக்குறை ஏற்படுகிறது. சீனிவாசன் பசியுடன் வந்து, “அக்கா எனக்கு சீக்கிரம் கஞ்சியூத்து, பசிக்கி” (கதவு, பக்.14) என்று கேட்கிறான். ஆனால் வீட்டில் கஞ்சி இல்லை. இவ்வாறு கம்மஞ்சோறு, கஞ்சி போன்ற உணவுகள் வழியாக கிராமிய மக்களின் உணவுப் பழக்கமும் பொருளாதார நிலையும் ஒருங்கே பதிவு செய்யப்படுகின்றன.

மழை, வறட்சி, இயற்கைச் சூழல்

கிராமிய வாழ்வின் பொருளாதாரம் இயற்கையோடு நெருங்கிய தொடர்புடையது. மூன்று ஆண்டுகளாக மழையில்லாத நிலை குடும்பத்தின் வறுமைக்கு முக்கியக் காரணமாகச் சுட்டப்படுகிறது. பின்னர் கதவு இல்லாத வீட்டுக்குள் குளிர்காற்று புகும் காட்சி வருகிறது: “கார்த்திகை மாசத்து வாடை, விஷக்காற்றைப் போல் வீட்டினுள் வந்து அலைமோதிக் கொண்டே இருந்தது.” (கதவு, பக்.14) இயற்கைச் சூழலின் கடுமை ஏழைக் குடும்பத்தின் வாழ்வை எவ்வாறு நேரடியாகப் பாதிக்கிறது என்பதை இக்காட்சி உணர்த்துகிறது.

வரி மற்றும் கிராமிய நிர்வாக அமைப்பு

சிறுகதையில் ‘தலையாரி’ என்ற கிராமிய நிர்வாகப் பாத்திரம் இடம்பெறுகிறது. அவன் வரிப் பாக்கியை வசூலிக்க வருகிறான். “வந்தா, தீர்வையைக் கொண்டு வந்து போடச்சொல்லு.” (கதவு, பக்.12) தாய் பொருளாதார நெருக்கடியை எடுத்துக் கூறினாலும், வரி செலுத்த வேண்டிய கட்டாயம் தொடர்கிறது: “நாங்க என்னத்தை வச்சு உங்களுக்குத் தீர்வைப் பாக்கியைக் கொடுப்போம்?” (கதவு, பக்.12) இதன் மூலம் கிராமிய மக்களின் வாழ்க்கையில் நிர்வாக அமைப்பும் பொருளாதாரச் சுமையும் எவ்வாறு செயல்பட்டன என்பதற்கான ஒரு பண்பாட்டுச் சான்று கிடைக்கிறது.

நாட்டுப்புற நிகழ்த்துக் கலைகளின் தாக்கம்

கதவைத் தூக்கிச் செல்லும் நிகழ்வை குழந்தைகள் ஒரு ஊர்வலமாகக் கற்பனை செய்கின்றனர். ஒருவன் நாதஸ்வரம் வாசிப்பதைப் போலவும் மற்றொருவன் தவுள் வாசிப்பதைப் போலவும் பாவனை செய்கிறான். “ஒருவன் நாதஸ்வரம் வாசிப்பவனைப் போல் கைகளை வைத்துக்கொண்டு ‘பீப்பீ... பீ...பீ...’ என்று சத்தம் காட்டி...” அதேபோல், “திடும்... திடும்.. ததிக்குண... ததிக்குண” (கதவு, பக்.12-13) என்று தவுள் இசையைப் பின்பற்றுகின்றனர். இதில் கிராமிய ஊர்வலம், நாதஸ்வரம், தவுள் போன்ற நிகழ்த்துக் கலைப் பண்பாடுகள் குழந்தைகளின் கற்பனை விளையாட்டிலும் இடம்பெறுகின்றன.

பேச்சுமொழிப் பண்பாடு

கி.ரா.வின் படைப்புகளின் தனிச்சிறப்புகளில் ஒன்று வட்டாரப் பேச்சுமொழியைப் பயன்படுத்துவதாகும். ‘கதவு’ சிறுகதையிலும் உரையாடல்கள் இயல்பான கிராமியப் பேச்சு வழக்கில் அமைகின்றன.

எடுத்துக்காட்டாக, “டேய் உங்க ஐயா எங்கே?” “ஊருக்குப் போயிருக்காக.” “உங்க அம்மா?” “காட்டுக்குப் போயிருக்காக.” அதேபோல், “மூணு வருசமா மழை தண்ணி இல்லையே.” (கதவு, பக்.12) என்ற பேச்சுவழக்கு சொற்றொடர்கள் கிராமிய மக்களின் மொழியுணர்வையும் வட்டார மொழிப் பண்பையும் பதிவு செய்கின்றன.

வீட்டின் பாதுகாப்பும் கதவின் பண்பாட்டு முக்கியத்துவமும்

கதவு அகற்றப்பட்ட பிறகு வீட்டின் நிலை முற்றிலும் மாறுகிறது. “கதவு இல்லாததால், வீடு இருந்தும் பிரயோஜனம் இல்லாமல் இருந்தது.” (கதவு, பக்.14) இவ்வரி கதவின் பயன்பாட்டைத் தாண்டி அதன் பண்பாட்டு முக்கியத்துவத்தையும் உணர்த்துகிறது. கதவு என்பது வீட்டின்

எல்லையையும் பாதுகாப்பையும் குறிக்கும். கதவு இல்லாததால் குளிர் வீட்டுக்குள் புகுகிறது; கைக்குழந்தையின் உடல்நிலை பாதிக்கப்படுகிறது. இறுதியில் அந்தக் குழந்தையும் உயிரிழக்கிறது. இதன் மூலம் ஒரு சாதாரண வீட்டுப் பொருள் குடும்பத்தின் வாழ்வில் எவ்வளவு முக்கியமானதாக இருக்கிறது என்பதை ஆசிரியர் உணர்த்துகிறார்.

பொருள்களோடு மனிதர்களுக்குள்ள உணர்வுப் பிணைப்பு

கதையின் இறுதியில் லட்சுமியும் சீனிவாசனும் தங்கள் பழைய கதவை மீண்டும் கண்டுபிடிக்கின்றனர். கதவு கிராமச் சாவடிக்குப் பின்னால் சாத்தப்பட்டிருக்கிறது. “உண்மைதான். அதே கதவு சாத்தப்பட்டு இருந்தது.” (கதவு, பக்.15) குழந்தைகள் கதவைத் தொட்டு, தடவி, அதில் இருந்த மண்ணைத் துடைக்கின்றனர்.“அருகில் போய் அதைத் தொட்டார்கள். தடவினார்கள்.” (கதவு, பக்.15) லட்சுமி கதவோடு முகத்தை ஒட்டிக் கொள்கிறாள்: “கதவோடு தன் முகத்தை ஒட்டவைத்துக் கொண்டாள்.” இறுதியில், “அவர்கள் இருவரின் கைகளும் கதவைப் பலமாகப் பற்றியிருந்தன.” (கதவு, பக்.15) என்று கதை முடிகிறது. இக்காட்சி கதவின் மீதான குழந்தைகளின் பாசத்தை மட்டும் காட்டுவதில்லை. அவர்களுடைய வீடு, குழந்தைப் பருவம், குடும்ப நினைவுகள், பாதுகாப்பு, கடந்த கால வாழ்க்கை ஆகிய அனைத்தும் அந்தக் கதவுடன் பிணைந்திருப்பதை உணர்த்துகிறது.

கதவு – நினைவின் பண்பாட்டு ஆவணம்

கதையில் கதவின் மீது ஏற்கெனவே ஒரு பழைய படம் ஒட்டப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. “ஒருவேளை அது லட்சுமியின் தகப்பனார் குழந்தையாக இருக்கும்போது ஒட்டியதாக இருக்கலாம்.” (கதவு, பக்.12) இது கதவுக்கு தலைமுறைத் தொடர்ச்சியைக் கொடுக்கிறது. ஒரு தலைமுறையின் குழந்தைப் பருவம் அந்தக் கதவில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது; அடுத்த தலைமுறையும் அதே கதவைத் தன் விளையாட்டிற்கும் நினைவுகளுக்கும் பயன்படுத்துகிறது. எனவே கதவு தலைமுறைகளை இணைக்கும் பண்பாட்டு நினைவுப் பொருள் என்ற நிலையைப் பெறுகிறது.

சமூக உறவும் அண்டை வீட்டுப் பண்பாடும்

கதவாட்டத்தில் பக்கத்து வீட்டுக் குழந்தைகளும் கலந்து கொள்கின்றனர்.

“பக்கத்து வீட்டுக் குழந்தைகளும் ஆரவாரத்தோடு கலந்து கொண்டார்கள்.” (கதவு, பக்.9) இதன் மூலம் கிராமிய வாழ்வில் அண்டை வீட்டுக் குழந்தைகளுக்கிடையிலான நெருக்கமும் கூட்டாக விளையாடும் பண்பும் வெளிப்படுகின்றன. கதவு அகற்றப்பட்டபோது குழந்தைகள் மீண்டும் குடும்பத்தினருடன் வந்து நிற்பதும், லட்சுமி அழும்போது அமைதியாக அவளருகில் அமர்வதும் சமூகப் பரிவை வெளிப்படுத்துகின்றன.

பெண்ணின் வாழ்வியல்

ரங்கம்மாளின் பாத்திரம் கிராமியப் பெண்ணின் பல்வேறு பொறுப்புகளை வெளிப்படுத்துகிறது. அவள் காட்டுக்குச் சென்று வேலை செய்கிறாள்; விறகு சேகரிக்கிறாள்; குழந்தைகளைப் பராமரிக்கிறாள்;

கணவன் இல்லாத சூழலிலும் குடும்பத்தைத் தாங்குகிறாள். விறகு சேகரிக்கும்போது தேள் கொட்டியிருந்தும், குழந்தைகளுக்காக வீட்டிற்கு வருகிறாள். இதன் மூலம் கிராமியப் பெண்ணின் உழைப்பு, குடும்பப் பொறுப்பு, தாய்மை, தியாகம் ஆகிய பண்பாட்டுக் கூறுகள் பதிவாகின்றன.

குழந்தைகளின் உலகமும் வறுமையின் தாக்கமும்

சிறுகதையின் தொடக்கத்தில் கதவு குழந்தைகளுக்கு மகிழ்ச்சியின் உலகமாக உள்ளது. ஆனால் கதவு அகற்றப்பட்டதும் அதே குழந்தைகளின் வாழ்க்கை துயரமாக மாறுகிறது. முன்பு: “மீண்டும் கதவு ஆட்டம் தொடங்கியது!” (கதவு, பக்.9) என்று மகிழ்ச்சி நிறைந்த காட்சி வருகிறது. பின்னர் கதவு இல்லாமல்: “சீனிவாசன்... ஏமாற்றத்தாலும் பசியாலும் அவன் அழ ஆரம்பித்தான்.” (கதவு, பக்.15) என்று துயரமான நிலை உருவாகிறது. இவ்வாறு ஒரே கதவு குழந்தைகளின் மகிழ்ச்சி–துயரம், விளையாட்டு–வறுமை, பாதுகாப்பு–பாதுகாப்பின்மை ஆகிய இரு எதிர்நிலைகளையும் இணைக்கும் மையச் சின்னமாக அமைகிறது.

முடிவுரை

கி.ரா.வின் ‘கதவு’ சிறுகதை ஒரு குடும்பத்தின் கதையை மட்டும் கூறுவதில்லை; அதன் வழியாக ஒரு கிராமிய சமூகத்தின் பல அடுக்குப் பண்பாட்டை ஆவணப்படுத்துகிறது. கதவு என்ற எளிய பொருளை மையமாகக் கொண்டு குழந்தைகளின் விளையாட்டு, உடன்பிறப்புப் பாசம், தாயின் உழைப்பு, கூலி வாழ்க்கை, வறுமை, உணவுப் பழக்கம், மழையின்மை, வரிவசூல், வட்டார மொழி, நாட்டுப்புறக் கலைப் பாவனை, அண்டை உறவு, வீட்டின் பாதுகாப்பு, பொருள்களோடு மனிதர்களுக்குள்ள நினைவுப் பிணைப்பு ஆகியவை சிறுகதையில் பதிவாகியுள்ளன.

குறிப்பாக, “கதவு இல்லாததால், வீடு இருந்தும் பிரயோஜனம் இல்லாமல் இருந்தது” என்ற வரி கதவின் பொருள்சார் பயன்பாட்டைத் தாண்டி, அது ஒரு குடும்பத்தின் வாழ்வியல் பாதுகாப்பையும் சமூக அடையாளத்தையும் தாங்கும் பொருளாக இருந்ததை உணர்த்துகிறது.

இறுதியில் குழந்தைகள் தங்கள் பழைய கதவை மீண்டும் கண்டுபிடித்து அதனைத் தொட்டு, தடவி, முகத்தை ஒட்டி, கைகளால் இறுகப் பற்றிக் கொள்வது, மனிதன் வாழும் இடம், பொருள், நினைவு, உறவு ஆகியவற்றுக்கிடையிலான ஆழமான பண்பாட்டுத் தொடர்பை வெளிப்படுத்துகிறது. எனவே, ‘கதவு’ சிறுகதை கரிசல் வட்டார மக்களின் வாழ்வியலைப் பிரதிபலிக்கும் ஒரு முக்கியமான பண்பாட்டு ஆவணமாகக் கருதத்தக்கது. கதவு இக்கதையில் ஒரு வீட்டின் நுழைவாயில் மட்டுமல்ல; ஒரு குடும்பத்தின் கடந்தகால நினைவுகளையும் நிகழ்கால வறுமையையும் எதிர்கால நம்பிக்கையையும் இணைக்கும் பண்பாட்டுச் சின்னமாக விளங்குகிறது.

துணைநூற் பட்டியல் (References)

1. வே.எவரெஸ்ட் மேரி, “கி.ராஜநாராயணனின் கதவு தந்த கனவு” புதிய அவையம், தொகுதி -7, வெளியீடு -2, சூன்.2023
2. வீ.ப.ஜெயசீலன் (தொ.ஆ), கி.ரா.வின் முத்து கதைகள் பத்து, கரிசல் இலக்கியக் கழகம் வெளியீடு, செப்.2024

© 2026 திருமதி .சுப்பம்மாள் பி. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..